# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# வர்த்தமானப் பத்திரிகை

**2024 ஆம் ஆண்டு ஒகத்து மாதம் 09 ஆம் திகதிய**
**பகுதி II இற்குக் குறைநிரப்பி**

(2024.08.13 ஆம் திகதியன்று வெளியிடப்பட்டது)


## கடை, அலுவலக ஊழியர் (ஊழியத்தையும் வேதனத்தையும் ஒழுங்குபடுத்துதல்) (திருத்தம்)

***(129 ஆம் அத்தியாயமான) கடை, அலுவலக ஊழியர் (ஊழியத்தையும் வேதனத்தையும் ஒழுங்குபடுத்துதல்) சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டமூலம்***

(தனியார் உறுப்பினர்களின் சட்டமூலம்)

கம்பஹா மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் கௌரவ (டாக்டர்) (திருமதி) சுதர்ஷினி பர்னாந்து புள்ளே அவர்களால் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ளது


இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது

கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்

**விலை : ரூபா 6.00** **தபாற் செலவு : ரூபா 150.00**

*இவ்வர்த்தமானியின் குறைநிரப்பியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

## கடை, அலுவலக ஊழியர் (ஊழியத்தையும் வேதனத்தையும் ஒழுங்குபடுத்துதல்) (திருத்தம்)

## (129 ஆம் அத்தியாயமான) கடை, அலுவலக ஊழியர் (ஊழியத்தையும் வேதனத்தையும் ஒழுங்குபடுத்துதல்) சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக:-

*சுருக்கப் பெயர்*

**1.** இச்சட்டம், 2024 ஆம் ஆண்டின்        ஆம் இலக்க, கடை, அலுவலக ஊழியர் (ஊழியத்தையும் வேதனத்தையும் ஒழுங்குபடுத்துதல்) (திருத்தச்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்.

*அத்தியாயம் 129 இன் 18ஆ ஆம் பிரிவைத் திருத்துதல்*

**2.** (129 ஆம் அத்தியாயமான) கடை, அலுவலக ஊழியர் (ஊழியத்தையும் வேதனத்தையும் ஒழுங்குபடுத்துதல்) சட்டத்தின் 18ஆ ஆம் பிரிவானது அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவில் (இ) மற்றும் (ஈ) ஆகிய பின்வரும் உட்பிரிவுகளை உட்புகுத்துவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது:-

"(இ) கர்ப்பத்தின் முதல் இருபத்தி எட்டு வாரங்களில் கருச்சிதைவு ஏற்பட்டால் கருச்சிதைவு ஏற்பட்ட திகதியிலிருந்து ஏழு நாட்கள்; மற்றும்

(ஈ) சட்டபூர்வ அல்லது மருத்துவ காரணங்களின்கீழ் கருக்கலைப்பு செய்யப்படும் சந்தர்ப்பங்களில், கருக்கலைப்பு செய்யப்பட்ட திகதியிலிருந்து ஏழு நாட்கள்.".

*ஒவ்வாமை ஏற்படும் விடயத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்*

**3.** இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கு இடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

2-PL 014801-120 (2024/08)